**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : செல்வி **V.** பார்கவி**.,B.A.,B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2052, பிலவ வருடம் கார்த்திகை மாதம் 27-ஆம்நாள்

------

**<u>அசல் வழக்கு எண்.146/2012-ல் இடைமனு எண்.02/2021</u>**

| | |
|---|---|
| சபிதா ( இறந்துவிட்டார்) | ...வாதி |
| 1. ஷாலினா | ..1-ம்மனுதாரர்/ 1-வது புதிதாக சேர்க்கப்பட்ட நபர் |
| 2. சுரேந்தர் | ..2-ம்மனுதாரர்/2-வது புதிதாக சேர்க்கப்பட்ட நபர் |

...எதிர்...

1. அஞ்சலை
2. மணிகண்டன்
3. மார்கோணி
4. ஸ்ரீசட்டநாத சுவாமி தேவஸ்தானம், சீர்காழி ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 02.12.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஜி. சரவணன் அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர் கள்' தரப்பில் வழக்கறிஞர் திரு ஆர்.கார்த்திக்ராஜன் அவர்களும் ஆஜராகியும, 4-ம் எதிர்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதி கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 6, விதி 17- ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**

1,2 மனுதாரர்கள் வழக்கில் புதிதாக சேர்க்கப்பட்ட நபர்கள். அசல் வழக்கை மனுதாரர்களின் தாயாரான சபிதா வாதியாக இருந்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருக்கும் வாதி கடந்த 20.05.2021 அன்று இறந்துவிட்டார். இறந்த வாதிக்கு 1,2 மனுதாரர்கள் வாரிசுகள். மனுதாரர்களை இறந்த வாதியின்வாரிசுகளாக சேர்க்கக்கோரி மனுத்தாக்கல்செய்து அம்மனு இந்நீதிமன்றத்தால்

அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்த மனுவில் கண்டுள்ளவாறு வழக்கின் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

3. **<u>1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபணைக் குறிப்பாணைச் சுருக்கம்</u>**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. மனுதாரர்கள் பிராதை திருத்த கூறுவதற்கான காரணங்கள் சரியல்ல. மனுதாரர்கள் மனுவின் திருத்த விவரத்தில் குறிப்பிட்டுள்ள திருத்த விபரங்களும் சரியல்ல. சரியான திருத்த விபரங்கள் குறிப்பிடாமல் பிராதை திருத்தம் செய்ய மனுதாரர்கள் கோருவது சரியல்ல. எனவே இம்மனுவை 1 முதல் 3 எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

.4. **<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாராகள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கை 1,2 மனுதாரர்களின் தாயார் சபீதா எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி கடந்த 20.05.2021 அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த வாதிக்கு 1,2 மனுதாரர்கள் வாரிசுகள் என்றும், இறந்த வாதிக்கு 1,2 மனுதாரர்களை வாரிசுகளாக சேர்க்கக் கோரி மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் இம்மனுவில் கண்டுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்யப்பட்டது. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிராது திருத்த மனுவில் திருத்த விபரங்கள் சரியாக விவரிக்கப்படவில்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை மனுதாரர்களின் தாயாரான சபிதா எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கு நிலுவையில்

இருக்கும்பொழுது வாதி சபிதா 20.05.2021 அன்று இறந்துவிட்டார் என்பதைப்பொறுத்தும, மனுதாரர்கள் வாதியின் வாரிசுகள் என்பதைப்பொறுத்தும் , 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. இறந்த வாதியின் வாரிசுகளான மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமெனக்கோரி மனுதாரர்கள் இடைமனு எண். 01/2021-யை தாக்கல் செய்து அந்த மனு முழு விசாரணைக்குப் பின்னர் இந்நீதிமன்றத்தால் 07.10.2021 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது வழக்குக்கோப்புகளை பரிசீலனை செய்தபொழுது தெரியவருகிறது. அவ்வாறு மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி தாக்கல் செய்துள்ள இடைமனு எண். 01/2021அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் அடிப்படையில் அசல் வழக்கில் மனுதாரர்களை சேர்க்கும் விதமாக வழக்குரையை திருத்தம் செய்வது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திருத்த விபரங்கள் தவறாக உள்ளது என்று கூறியுள்ளார்களே தவிர என்ன வகையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை. மேலும் மனுதாரர்கள் இம்மனுவில் கோரியுள்ள வழக்குரை திருத்தமானது இந்நீதிமன்றத்தால் இடைமனு எண்.01/2021-ல் 07.10.2021 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையிலானது என்பதால், மனுதாரர்கள் இம்மனுவில் கோரியுள்ளவாறு வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்க வேண்டுமெனக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளதால் இம்மனுவினை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவின் தன்மை கருதி மனுவிற்கான செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021ம் ஆண்டு டிசம்பர் 13-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

<u>மனுதாரர்கள்  தரப்பு சாட்சிகள்</u> - இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> -இல்லை-

<u>மனுதாரர்கள்  தரப்பு சான்றாணங்கள்</u> - இல்லை-

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> - இல்லை-

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 146/2012-ல்
இடைமனு எண். 02/2021
நாள் - 13.12.2021